JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE,   PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 250/2011 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW4 | Prosecution /Defence / Court | |
| Name | Tr.Mani<br>SI of Police | Caste | |
| Father's Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | Perundurai | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths  Act 1969( Central Act 44 of 1969 ) of the day of
Date: 19.01.2021

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது ஈரோடு மாவட்டம் நகர காவல் நிலையம் குற்ற பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றிவருகிறேன். கடந்த *23.05.2011* ஆம் வருடம் பெருந்துறை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றியபோது 23.05.2011 அன்று 18.00 மணிக்கு திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த விக்னேஷ் மனைவி மகராசி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரை பெற்று காவல் நிலைய குற்ற எண்.366/2011 இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A)-வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புகார் அசலையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மேற்படி மு.த.அ **அ.த.சா.ஆ.2**. பின்னர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு ஆய்வாளரிடம் வழக்கு கோப்பினை சமர்ப்பித்து பின்னர் ஆய்வாளரின் வாய்மொழி உத்தரவின்பேரில் 23.05.2011 தேதியில் மாலை 18.45 மணிக்கு சம்பவ இடமான ஈரோடு -கோவை NH-47 விஜயமங்கலம் டோல்கேட்டிற்கு கிழபுறமாக உள்ள சம்பவ இடத்தை சாட்சிகள் அருண்பாட்ஷா மற்றும்

ஈஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து அதில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். மேற்படி மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.3**. பார்வை மகஜர் **அ.த.சாஆ.4.** பின்னர் சம்பவ இட சாட்சிகளான மகராசி , அருண்பாஷா மற்றும் ஈஸ்வரன் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பெற்றேன். பின்னர் 24.05.2011 தேதியில் ஈரோடு அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து இறந்த சிங்கராஜ் உடலை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். மேற்படி பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ.5**. பின்னர் சாட்சிகள் சந்திரபுஷ்பம், ஐகோர்ட் ராஜா , முருகானந்தம் , ராஜ்குமார், ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இறந்தவரின் பிரேதத்தை சடலக்கூராய்விற்காக அனுப்பிவைத்தேன். பின்னர் இறந்தவர் விபத்திற்குள்ளான லாரி HR-38-P-1783 என்கிற கன்டெய்னர் லாரியை தக்க வேண்டுதல் கடிதத்துடன் மோட்டார் வாகன ஆய்விற்கு 24.05.2011 தேதியில் அனுப்பிவைத்தேன். பின்னர் எதிரியை தேடி வர கடந்த 13.06.2011 தேதியில் நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் எதிரி ஓட்டிவந்த வாகனமான TN-01-L-6098 என்கிற ஆட்டோவை 14.06.2011 தேதியில் தக்க வேண்டுதல் கடிதத்துடன் மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பிவைத்தேன். பின்னர் இவ்வழக்கின் கோப்புகளை மேல்விசாரணைக்காக ஆய்வாளரிடம் சமர்ப்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.,**

நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தபோது சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றிவந்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கில்

காயம்பட்ட இருவருக்காகவும் ஈரோடு அரசு மருத்துவமனையிலிருந்து தகவல் பெறப்பட்டது. இந்த வழக்கில் நான் எழுத்து மூலமான புகார் பெறவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் எனது முதல் விசாரணையில் எழுத்து மூலமான புகாரை பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்றபோது சம்பவத்தில் ஈடுபட்ட வாகனங்கள் சம்பவ இடத்தில் இல்லையென்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.1 மகராசியின் விபத்து பதிவேடு என்னால் பெறப்பட்டது என்றால் சரிதான். அது **எ.த.சா.ஆ.1.** மேற்படி விபத்து பதிவேடில் ஆட்டோவில் பயணித்து கொண்டிருந்தபோது பின்புறமாக வந்த லாரி ஆட்டோவில் மோதியதால் அடிப்பட்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். எனவே நான் வாங்கியுள்ள புகார் வாக்குமூலத்திற்கும் விபத்து பதிவேட்டில் கூறப்பட்டுள்ள சங்கதிக்கும் வேறுபாடு உள்ளதென்றால் சரிதான். மேற்படி விபத்து பதிவேடில் ஆட்டோவின் பின்புறம் தான் லாரி மோதியுள்ளது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். லாரிக்கு எத்தனை சக்கரம் என்று பார்த்தேனா என்றால் நினைவில்லை. இறந்தவருக்கு உடல் நலக்குறைவால் ஐஆர்டி மருத்துவமனைக்கு வரும்பொழுதுதான் இந்த விபத்து ஏற்பட்டது என்று தெரிந்துகொண்டேனா என்றால் சரிதான். பிரேத விசாரணையின்போது இறந்தவருக்கு உடல் நலக்குறைவு இருந்தது பற்றி மருத்துவரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் எழுதப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றால் சரியல்ல நான் தான் எழுதினேன். சம்பவ இடத்திற்கு இருபுறமும் கடைகள் உள்ளன என்றால் சரிதான். அவர்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால்ல சரிதான். அதேபோல் சம்பவ இடத்தில் இருபுறமும் கடைகள் உள்ளன என்பதை நான் மாதிரி வரைபடத்தில் காட்டவில்லை என்றால் சம்பவம் எதிர்புறத்தில் நடந்ததால் காட்டவில்லை. சம்பவம் நடந்தவுடன் இரண்டு வாகனங்களும் காவல் நிலையத்திற்கு

கொண்டுவரப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் சம்பவம் நடந்து 20 நாட்கள் கழித்துதான் மோட்டார் வாகன ஆய்விற்கு எதிரி ஓட்டிவந்த வாகனம் அனுப்பிவைக்கப்பட்டதென்றும் மேற்படி காலதாமதத்திற்கு குறிப்பிட்டு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் இல்லை. நான் சொன்னதுபோல் சொன்னநேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றும் ஆவணங்கள் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு முன்னால் சென்றுகொண்டிருந்த கன்டெய்னர் லாரியின் கவனக்குறைவு என்றால் சரியல்ல. மேற்படி லாரி ஓட்டுநர் வெளிமாநிலத்தவர் என்பதால் அவர் மீது இவ்வழக்கு தொடரப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு கோப்பின் மூலமாக பார்க்கும்போது ஆய்வாளர் எனக்கு வாய்மொழியாக உத்தரவு கொடுத்ததிற்கான எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கை விசாரிக்க எனக்கு எவ்வித அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தவறான புகாரை பெற்று இவ்வழக்கின் ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

Signature of the Witness

Name of the Interpreter
Tmt.K.S.Shabeena, B.A.B.L.
Judicial Magistrate,
Perundurai.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the-----day of --------------2021.

Signature of Interpreter